**மாண்புமிகு துணை முதலமைச்சரும் கழக இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், 24.11.2025 அன்று சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில், அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.**







● வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.11.81 கோடி மதிப்பீட்டில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட்டுள்ள அம்பத்தூர் தொழிற்பேட்டை பேருந்து நிலையத்தைத் திறந்து வைத்து, புதிய பேருந்துகளின் இயக்கத்தை துவக்கி வைத்தார்.



● திருவள்ளூரில் நடைபெற்ற அரசு விழாவில் 37,000 பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்கள், மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு வங்கிக் கடன் இணைப்புகள், 50,000 மகளிர் சுய உதவிக் குழுவினருக்கு அடையாள அட்டைகள், 2000 பேருக்கு குடும்ப அட்டைகள், 4000 பேருக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்துக்கான ஆணைகள் என ஒரு லட்சத்துக்கும் மேலான பயனாளிகளுக்கு ரூ.1,500 கோடி மதிப்பிலான திட்ட உதவிகளை வழங்கினார்.






● ஆவடியில் புதுப்பிக்கப்பட்ட பேரறிஞர் அண்ணாவின் வெண்கல சிலையைத் திறந்துவைத்து உரையாற்றினார்.





● திருவள்ளூர் மாவட்டத்தில் ரூ.334 கோடி மதிப்பீட்டில் முடிவுற்றத் திட்டப் பணிகளைத் தொடங்கி வைத்து, ரூ.138 கோடி மதிப்பிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 300 மாற்றுத்திறனாளிகளுக்கு ஸ்கூட்டர்கள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.



● ஆவடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மாநகர – ஒன்றிய – நகர– பகுதி – வட்ட – கிளை அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் பாக அமைப்பாளர்கள் அறிமுகக் கூட்டத்தில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.










● ஜூனியர் ஹாக்கி உலகக் கோப்பை – 2025 போட்டிகள் சென்னையில் நடைபெற உள்ள நிலையில் சமீபத்தில் புதுப்பிக்கப்பட்ட மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி மைதானத்தை ஆய்வு செய்தார்.